**NON – MAJOR ELECTIVE COURSE (NMEC- I)**

**Introduction to Indian Constitution**

**Unit – II**

## II.1. Fundamental Rights:

**அடிப்படை உரிமைகள்:**

வாழ்க்கைக்கு எப்படி காற்றும் ஒளியும் தேவையோ அதேபோன்று மனிதனுடைய உரிமையான வாழ்க்கைக்கு அடிப்படை உரிமைகள் தேவைப்படுகின்றன. இந்த அடிப்படை உரிமைகள் சர்வாதிகார ஆட்சியளர்களிடமிருந்து மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதால் அவை நிரந்தரமாகப் பாதுகாக்கப்பட வேண்டும். அடிப்படை உரிமைகளைத் தனித் தலைப்பின்கீழ் அரசியல் அமைப்பில் சேர்ப்பதால் மக்களின் உரிமைகள் உத்திரவாதம் செய்யப்படுகின்றன. அடிப்படை உரிமைகள் என்றால் கட்டுப்பாடற்ற வரம்பில்லாத உரிமைகளாகவும் இருக்கக் கூடாது. கட்டுப்பாடற்ற உரிமைகள் குழப்பத்தில் தான் முடியும். ஆகையால் அடிப்படை உரிமைகள் மேலுள்ள கட்டுப்பாடுகளையும் அரசியலமைப்பிலேயே சேர்த்து விடுகிறார்கள். அடிப்படை உரிமைகளுக்கு விளக்கங்கள் தருவது நீதிமன்றத்தின் பணியாகும்.

அடிப்படை உரிகைளைப் பற்றி ஆராய்ந்து அறிக்கை தரும்படி இந்திய அரசியல் நிர்ணய சபையில் அடிப்பட உரிமைகளைகப் பற்றிய தனிக்குழு சர்தார் படேல் தலைமையில் அமைக்கப்பட்டது. குழுவின் அறிக்கையிலிருந்து முக்கியமான பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு அவை அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டன. இந்திய அரசியல் அமைப்பில் மூன்றாவது பகுதி இந்த நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை விவரிக்கிறது.

அடிப்படை உரிமைகளைப் பற்றி இந்திய அரசியலமைப்பில் காணப்படுவது போன்ற விரிவான விளக்கத்தை வேறெந்த நாட்டின் அரசியலமைப்பிலும் காண்பது அரிது. அமெரிக்க அரசியலமைப்பைத் தழுவியே இந்திய அரசியலமைப்பு தரும் அடிப்படை உரிமைகள் அமைந்திருக்கின்றன. அரசியலமைப்பின் மூன்றாம் அத்தியாயத்தில் 12-வது விதியிலிருந்து 35-வது விதி முடிய பதினான்கு விதிகள் அடிப்படை உரிமைகளைப் பற்றி விவரிக்கின்றன. ஒரு அரசில் மக்கள் அனுபவிக்கும் உரிமைகளைக் கொண்டே அந்த அரசின் தன்மைகளை அறிந்து கொள்ளலாம்" என்று அரசியலறிஞர் லாஸ்கி கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது ஆகும்.

**அடிப்படை உரிமைகளின் முக்கிய நன்மைகள்:**

இந்திய அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மற்ற நாடுகளில் உள்ளதைவிட மிகவும் விரிவானது. சில உரிமைகள் சமூக நிலைமைகள் காரணமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. பெரும்பாலான உரிமைகள் இந்திய மக்களுக்கு மட்டுமே

உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. சில உரிமைகள் அதாவது சட்டத்தின் முன் சமம், மத உரிமை போன்ற உரிமைகள் இந்தியர்களுக்கு மட்டுமல்லாமல், அந்நியர்களுக்கும் பொருந்தும்.

அரசியல் அமைப்பில் உள்ள உரிமைகள், அரசாங்கத்தின் மீதும் அதன் அதிகாரிகள் மீதும் சில அடிப்படையான தடைகளை விதிக்கின்றன. எந்தவொரு அரசாங்கமும் அதிகாரியும் சட்டத்தின் முன் சமம்.

அடிப்படை உரிமைகளும் சில எல்லைக்குள்ளேயே உறுதிப்பாடு செய்யப்பட்டுள்ளன. கட்டுப்பாடற்ற உரிமைகள் சமூகப் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் ஊறுவிளைவிக்கும்.

1967 பிப்ரவரி 27-ல் தலைமை நீதிமன்றத்தில் 17-வது அரசியல் அமைப்புத் திருத்தத்தின் மேல் கொடுக்கப்பட்ட தீர்ப்பின்படி அடிப்படை உரிமைகளை நீக்கவோ, திருத்தியமைக்கவோ பாராளுமன்றத்திற்கு அதிகாரமில்லை. இதனால் அடிப்படை உரிமைகள் பாராளுமன்றத்தின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டது, நிரந்தரமானது, மாற்றியமைக்க முடியாதது என்பதும், புனிதமானது என்பதும் புலனாகிறது.

இந்திய பாராளுமன்றம் அடிப்படை உரிமைகளைப் பற்றிய எந்த விதத் திருத்தமோ கொண்டுவர முடியாது. அடிப்படை உரிமைகளுக்குப் புறம்பான எந்தவொரு சட்டமும், பாராளுமன்றத்தாலோ, மாநில சட்டசபைகளாலோ நிறைவேற்ற முடியாது. தலைமை நீதிமன்றத்தின் விளக்கத்தின்படி இந்தியாவில் அடிப்படை உரிமைகள் அரசியல் அமைப்பில் புனிதமான இடம் பெற்றுவிட்டன. ஆனால் 1971-ல் நிறைவேற்றப்பட்ட 24-வது திருத்தத்தின்படி, அரசியலமைபிலுள்ள எந்தவொரு பகுதியையும் அடிப்படை உரிமைகள் உள்பட திருத்தியமைக்கும் அதிகாரம் இந்திய பாராளுமன்றத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது.

அடிப்படை உரிமைகளை உத்திரவாதம் செய்ததோடு நின்றுவிடாமல், அவைகளை மக்கள் நிலைநாட்டிக் கொள்ளுவதற்கும் விதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. நீதிமன்றங்கள் மூலம் மக்கள் தங்கள் உரிமைகளை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். அதற்கான கட்டளைகள் பிறப்பிக்கவும் நீதிமன்றங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுவே ஒரு அடிப்படை உரிமையாகவும் சேர்க்கப்பட்டுள்ளது.

**அடிப்படை உரிமைகள் - வகைகள்**

**சமத்துவ உரிமை (Right to Equality):**

சட்டத்தின் முன் இந்திய மக்கள் எல்லோதும் சமம். மக்களிடையே, மதம், இனம், வகுப்பு, பிறப்பிடம், பால்(sex) வேறுபாடுகளின்றி எல்லோரும் இந்நாட்டவர்கள் என்று சமமாக நடத்தப்பட வேண்டும். நாட்டிலுள்ள சமூக வேறுகாடுகளை அகற்ற இந்த உரிமை அத்தியாவசியமாகிறது.

ஆட்சித் துறையில் எல்லோருக்கும் சம வாய்ப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. எந்த விதமான வேறுபாடுகளுமின்றி கல்வி நிலையங்களில் அனுமதிக்கப்பட வேண்டும். சிறுபான்மையினர்

தங்களுக்கெனக் கல்வி நிலையங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம். தீண்டாமையும், கௌரவப் பட்டங்களும் ஒழிக்கப்பட்டுள்ளன.

எல்லோரும் சமம் என்று சமவாய்ப்புகளை உறுதிப்படுத்தப்பட்டிருந்தாலும் சில விதி விலக்குகளும் உள்ளன. சமூகத்தில் பொருளாதாரத் துறையிலும் கல்வியிலும் பின்தங்கியவர்களுக்குத் தனியாக ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. ஆட்சித்துறைக்கு நியமனம் செய்யப்படுவதிலும், குறிப்பிட்ட சதவிகிதம் இடங்கள் அவர்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. இவைகள் நேர்மையான கட்டுப்பாடுகளாகும்.

**தன்னுரிமை (Right to Freedoms):**

அரசியலமைப்பின் 19-வது விதியின் கீழ் மிகவும் முக்கியமான ஏழு தன்னுரிமைகள் உத்திரவாதம் செய்யப்பட்டுள்ளன. அவைகள் பின்வருமாறு:

- **கருத்துக்களை வெளியிடவும், பேசவும் உரிமை ( Frreom of Speech, Expression)**

  அரசியல் அமைப்பிற்குக் கொண்டுவரப்பட்ட முதலாவது திருத்தத்தின்படி மேலும் கட்டுப்பாடுகள் போடப்பட்டுள்ளன. பேச்சுரிமைக்கு வரம்புகள் போடப்பட்டுள்ளன. கீழ்க்கண்ட விளைவுகள் ஏற்படாத வண்ணம் மக்கள் பேச்சுரிமையை அனுபவிக்கலாம்.

  1. உரிமையைத் தவறான வழியில் உபயோகித்து அவதூறு வழக்குகளில் முடியாதவாறு இருக்கவேண்டும்.
  2. நீதிமன்றங்களை அவதூறாகப் பேசுவதற்கு பேச்சுரிமையைப் பயன்படுத்தக் கூடாது.
  3. சமூகத்திலுள்ள நன்னடத்தை நெறிகளுக்கு விரோதமாக இருக்கக் கூடாது.
  4. நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்து நேராத வண்ணம் பேச்சுரிமையை உபயோகிக்க வேண்டும்.
  5. வெளிநாடுகளுடன் உள்ள நல்லுறவைப் பாதிக்கக் கூடாது.
  6. பொது அமைதியைப் பாதிக்கக் கூடாது.
  7. குற்றமோ கிளர்ச்சியோ செய்யத் தூண்டிவிடும்படியாகப் பேச்சுரிமை அமையக் கூடாது.

- **கூடுவதற்கு உரிமை (Freedom of Assembly)**

- **சங்கங்கள் அமைத்துக்கொள்ள உரிமை ( Freedom of Associationn)**

- **நடமாட உரிமை (Freedom of Movement)**

  நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு தடையின்றிச் செல்ல உரிமையுண்டு. ஆனால் போர் முனைக்குச் செல்லுவதைத் தடை செய்யலாம். தொற்றுநோய் உள்ள வட்டாரத்திற்கு மற்ற பகுதியிலிருந்து மக்கள் போவதைத் தடுக்கலாம். அல்லது அமைதி ஒழுங்கு நிலைநாட்ட குறிப்பிட்ட காலத்திற்கு மக்களுடைய நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தலாம்.

- **உறைவிடம், குடியேறுதல் பற்றிய உரிமை (Freedom to reside, settle)**

- சொத்துரிமை (**Freesdom of Property**)

- வாழ்க்கைத் தொழில், வாணிகம் பற்றிய உரிமை (**Freedom of Profession, trade etc.**)

குடிமகன் எந்தவொரு தொழிலையும் வாணிபத்தையும் நடத்தலாம். ஆனால் பொறியியல், மருத்துவம், வழக்கறிஞர் போன்ற தொழில்களைச் செய்ய வேண்டுமென்றால் குறிப்பிட்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். வாணிபம், வர்த்தகத்தில் அரசாங்கமே பங்கெடுத்துக் கொண்டு நடத்தலாம்.

இவ்வாறு ஒவ்வொரு தன்னுரிமைகளுக்கு சில முக்கியமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

**சுரண்டலுக்கு எதிரான உரிமை:**

சுரண்டலுக்கு எதிரான உரிமை 23 மற்றும் 24-ம் விதிகளில் விளக்கப்பட்டுள்ளது. இதன்படி தனி நபர்களோ அல்லது அரசாங்கமோ தீய முறைகளில் வலுவற்றவர்களைப் பயன்படுத்திச் சுரண்டுவதை அரசியலமைப்பு தடை செய்கிறது. மக்களை இழி தொழில் புரியச் செய்தல், கட்டாய இலவசப்பணி, அடிமைத் தொழில், கட்டாய உழைப்பு போன்றவை அரசியலமைப்பால் தடை செய்யப்பட்டுள்ளன.

ஆனால் பொதுக் காரியங்களுக்காக அரசாங்கம் கட்டாயப் பணியைக் கொண்டுவரலாம். குற்றங்களுக்குத் தண்டனையாக கட்டாயப் பணியை அளிக்கலாம்.

**மத உரிமை: (Tight to Freedom of Religion):**

இது இந்தியர்களுக்கும் அந்நியர்களுக்கும் பொதுவானதாகும். சில கட்டுப்பாடுகளுக்குட்பட்டு, எல்லாருக்கும் எந்த விதமான மதக் கொள்கைகளையும் கடைப்பிடிக்கவும், பின்பற்றவும் பரப்பவும் உரிமையுண்டு.

மத நிறுவனங்கள் பொது அதிகாரப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதால் , இந்தப் பொருள்களைப் பற்றிய சட்டங்களை மத்திய அல்லது மாநில சட்டசபைகள் நிறவேற்றலாம். பொது அமைதி, சுகாதாரம், சமூக நீதிநெறிகள் இவைகளுக்குக் கட்டுப்பட்டு எல்லா மத நிறுவனங்களும் தனித்து இயங்கலாம். தங்களுக்கு வேண்டிய அமைப்புகளை ஏற்படுத்திக்கொள்ளலாம் அல்லது சொத்துக்களை ஈட்டவும் உரிமையுண்டு. குறிப்பிட்ட மதத்தைப் பரப்புவதற்காக வரி கொடுக்க யாரையும் கட்டாயப்படுத்தக் கூடாது.

அரசாங்கச் செலவிலே நடத்தப்படும் எல்லாக் கல்வி நிலையங்களிலும் மத போதனைகள் நடைபெறக் கூடாது.

நாட்டிலுள்ள சிறுபான்மையினர் தங்களுடைய மொழிகளையும் கலாச்சாரத்தையும் பாதுகாத்துக்கொள்ள உரிமையுண்டு. கல்வி நிலையங்களில் எல்லோருக்கும் மதம், இனம், வகுப்பு,

மொழி வேறுபாடுகளின்றி அனுமதி கொடுக்க வேண்டும். எல்லாவிதமான சிறுபான்மையினரும் தங்களுக்கெனக் கல்வி நிலையங்களை ஏற்படுத்திக்கொள்ளலாம். மத இன மொழி வேறுபாடுகள் காட்டாமல் அவர்களுடைய கல்வி நிலையங்களுக்கு அரசு உதவி செய்ய வேண்டும்.

**பண்பாடு, கல்வி உரிமை (Cultural and Educational Rights):**

பண்பாடு மற்றும் கல்வி உரிமை 29-ஆம் 30-ஆம் விதிகளில் விளக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தால் நேரிடையாக நடத்தப்படும் அல்லது அதன் உதவியுடன் நடத்தப்படும் கல்விக் கூடங்களில் படிப்பதற்காகச் சேர்க்கும்போது மதத்தின் அப்படையில் வேற்றுமை காட்டக் கூடாது என்று அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளது. சிறுபான்மையாக இருக்கும் இனத்தின் மீது அதனுடையதல்லாத பண்பாட்டை அரசாங்கம் கட்டாயம் சுமத்தக் கூடாது.

**சொத்துரிமை (Right of Property):**

அரசியலமைபப்பிலுள்ள 31, 31a, 31b,331c ஆகிய விதிகள் எல்லோருக்கும் சொத்துரிமையை உத்திரவாதம் செய்கின்றன. சொத்துக்கள் ஈட்டவும், வைத்து அனுபவிக்கவும், விற்கவும் பின் சந்ததிகளுக்கு விட்டுச் செல்லவும் உரிமை உண்டு.

சொத்துக்களை பொதுநலன் கருதி அரசாங்கம் எடுத்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் தனிச் சொத்துக்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய இழப்பீட்டை சட்டமன்றங்கள்தான் நிச்சயிக்க வேண்டும். பொது நன்மைக்காக அல்லாமல் வேறு எதற்கும் தனியார் சொத்துக்கள் அரசாங்க உரிமை ஆக்கப்படுதல் கூடாது.

1978-ஆம் ஆண்டின் 44-ஆம் திருத்தச் சட்டம் சொத்துரிமையை அடிப்படை உரிமைகள் பட்டியலிலிருந்து அகற்றி விட்டது. இப்போது சொத்துரிமை சாதாரண சட்ட உரிமையாகவே உள்ளது.

**சட்டப்படி பரிகாரம் தேடும் உரிமை:**

எல்லோருக்கும் தங்களுடைய அடிப்படை உரிமைகளை நீதிமன்றங்களின் முன் எடுத்துச் சென்று நீதிமன்றங்களின் மூலம் நிலைநாட்டிக்கொள்ள உரிமையுண்டு (Right to Costitutional Remedies). இது அடிப்படை உரிமையாக அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. அடிப்படை உரிமைகளை நிலை நாட்டுவதற்காக கட்டளைகளைப் பிறப்பிக்க நீதிமன்றங்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றங்கள் மூலம் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ளலாம் என்ற அரசியல் அமைப்பில் உத்திரவாதம் செய்யப்பட்டுள்ளதால் இதை அரசியல் அமைப்பு மூலம் பரிகாரம் பெரும் உரிமை என்று கூறலாம்.

இந்திய அரசியல் அமைப்பில் உறுதிப்பாடு செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் நிரந்தரமானவை, புனிதமானவையாகும்.

**II.2. Fundamental Duties:**

**அடிப்படைக் கடமைகள்:**

இந்திய அரசியலமைப்பிற்கு 1976-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டுள்ள 42-வது திருத்தத்தின்படி புதிய பகுதி IVA சேர்க்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் இந்திய மக்களுக்கான அடிப்படையான கடமைகள் விவரிக்கப் பட்டுள்ளன. இக்கடமைகளை அரசியலமைப்பில் இடம் பெறச் செய்து வலியுறுத்துவதன் மூலம், மக்களுடைய போக்கையும் சிந்தனையையும் மாற்றி, அமைதியான முறையில் சமூகப் புரட்சியை கொண்டுவர முயற்சி செய்யப்பட்டுள்ளது.

அரங்கில் ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடுகள் தங்களுடைய அரசியலமைப்புகளில் அடிப்படைக் கடமைகளைச் சேர்த்துள்ளன. சில அரசியலமைப்புகளில் அடிப்படை உரிமைகளும் கடமைகளும் இணைத்து கூறப்பட்டுள்ளன. சில அரசியல் அமைப்புகளில் கடமைகள் தனிப்பகுதியாக இடம் பெற்றறுள்ளன.

**இந்திய அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள பத்து அடிப்படைக் கடமைகள் பின்வருமாறு:**

1. அரசியலமைப்பின் வழிநிற்கவும், அதன் நோக்கங்களையும் நிறுவனங்களையும், தேசியக் கொடியையும், தேசிய கீதத்தையும் மதித்து நடக்க வேண்டும்.
2. நம்முடைய சுதந்திரத்திற்கான தேசியப் போராட்டத்திற்கு ஊக்கமளித்த உயர்ந்த நோக்கங்களைப் போற்றி வளர்த்து பின்பற்ற வேண்டும்.
3. இந்தியாவின் இறைமையையும் ஒற்றுமையையும், முழுமையையும் ஆதரித்துத் தாங்கி காப்பாற்ற வேண்டும்.
4. நாட்டைப் பாதுகாக்க அழைக்கபடும் போதெல்லாம் தேசிய சேவை செய்ய வெண்டும்.
5. மத, மொழி, வட்டார வேற்றுமைகளைக் கடந்து, இந்திய மக்கள் எல்லோரிடத்தும் இணக்கம் மற்றம் பொதுவான சகோதரத்துவத்தை வளர்க்க வேண்டும். பெண்களின் மதிப்பிற்கு இழிவுண்டாக்கும் செயல்களை அறவே கைவிட வேண்டும்.
6. நம்முடைய பலதரப்பட்ட நாகரிகத்தின் சிறந்த மரபை மதித்து, பேண வேண்டும்.
7. விஞ்ஞான நோக்கு மனிதாபிமானம், ஆராய்ந்து சீர்திருத்தம் செய்யும் மனநிலை முதலியவற்றை வளர்த்துக்கொள்ள வேண்டும்.
8. காடுகள், ஏரிகள், நதிகள், வனவிலங்குகள் உட்பட இயற்கைச் சூழல்களைப் போற்றி சீர்படுத்த வேண்டும். வாழும் உயிர்களிடமெல்லாம் இரக்கம் காட்ட வேண்டும்.
9. பொதுச்சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டும், வன்முறையைக் கைவிட வேண்டும்.

10. தனித்த மற்றும் கூட்டான செயல்களில் சிறப்பாக செயலாற்றும் தன்மை மூலமாக, உயர்ந்த நிலைகளையும் சாதனைகளையும் நிகழ்த்த நாடானது தொடர்ந்து முன்னேற வேண்டும்.

அரசியலமைப்பைப் பின்பற்றி அதன்வழி நிற்க வேண்டுமென்பது எல்லா நாடுகளின் அரசியலமைப்புகளிலும் பொதிந்துள்ள கடமையாகும்.

**தேசியக்கொடி, தேசிய கீதத்தின் மீது:**

தேசிய கீதத்தையும் நாட்டுப்பண்ணையும் மதித்து நடக்க வேண்டுமென்பதை கடமையாக சேர்த்திருந்தாலும் இதைப் பற்றிய சட்டம் (Prevention of Insults to National Honour Act) 1971-ல் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின்படி இந்திய தேசியக் கொடியை அல்லது அரசியலமைப்பை, எரிப்பதோ, கிழிப்பதோ, மிதிப்பதோ, அழிப்பதோ அகியவை மூலம் அவமதிப்பவர்களை, நாட்டுப்பண் பாடுவதை தடுப்பவர்களை அல்லது பாடிக் கொண்டிருக்கும் சபையில் குழப்பமுண்டாக்குகின்றவர்களை மூன்றாண்டு சிறைவாசம் கொடுத்து தண்டிக்கலாம்.

**சுற்றுச் சூழல் மீது:**

இயற்கை சுற்றுப்புறத்தைப் பேணிக் காக்க வேண்டுமென்பதை ஒரு கடமையாகப் புகுத்தியுள்ளது சிறந்த அம்சமாகும். ஒவ்வொரு குடிமகனும் விஞ்ஞான போக்கையும், மனிதாபிமானத்தையும் தன்னுடைய கடமையாக வளர்த்துக்கொள்ள வேண்டுமென்பது இந்திய அரசியலமைப்பில்தான் முதன்முதலில் புகுத்தப்பட்டுள்ளது.

வனவிலங்குகளைப் பாதுகாக்க வேண்டுமென்பது நமது கடமையாக சேர்க்கப்பட்டிருந்தாலும் இதைப்பற்றிய சட்டம் (Wild life Protection Act) 1972-ல் நிறைவேற்றப்பட்டது.

மகாத்மா காந்தியின் கொள்கைதான் வழிகாட்டி நெறிகளாகவும் அடிப்படை கடமைகளாகவும் அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள வழிகாட்டி நெறிகளை பல்வேறு அரசாங்கங்கள் பின்பற்றி சட்டங்கள் இயற்றி அமுல்படுத்தினால் சமூக நல நாடு ஏற்படும். அவ்வாறே பல்வேறு கடமைகளையும் இந்திய குடிமக்கள் பின்பற்றி நடந்தால், நாட்டில் சமூக புரட்சி ஏற்படும்.

**II.3. The Directive Principles of State Policy:**

**அரசுக் கொள்கையின் வழிகாட்டு நெறிமுறைகள்:**

இந்திய அரசியல் அமைப்பின் நான்காவது பகுதியில் 36லிருந்து 51 விதிகள் வரை வழிகாட்டி நெறிகள் கூறப்படுகின்றன. நடாள்வதில் வழிகாட்டி நெறிகளும் அடிப்படைத் தன்மை வாய்ந்ததாகும். வழிகாட்டி நெறிகள் சில முக்கியமான குறிக்கோள்களின் தொகுப்பாகும்.

நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் மத்திய மாநில அரசுகள் தங்களுடைய கொள்கைகளுக்கு வழிகாட்டி நெறிகளைப் பின்பற்றுவார்கள் என்று நம்பப்படுகிறது. வழிகாட்டி நெறிகளை அரசியல் அமைப்பில சேர்ப்பதில் அயர்லாந்து அரசியல் அமைப்பை இந்தியா பின்பற்றியது. அரசாங்கம் சிலவற்றைச் செய்யக் கூடாதென்று அடிப்படை உரிமைகள் தடை விதிக்கின்றன. ஆனால் வழிகாட்டி நெறிகளோ அரசாங்கம் சமூக நலத்தை வளர்க்க வேண்டுமென்று பரிந்துரைகள் செய்கின்றன.

அடிப்படை உரிமைகளை மக்கள் நீதிமன்றங்கள் மூலம் நிலைநாட்டிக் கொள்ளலாம். ஆனால் வழிகாட்டி நெறிகள் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துவன அல்ல. வழிகாட்டி நெறிகளைச் செயல்படுத்தவில்லை என்று நீதிமன்றங்களில் வழக்கு தொடர முடியாது என்று 45-வது விதி கூறுகிறது. நீதிமன்றங்கள் மூலம் அவைகளை மக்கள் நிலைநாட்டிக் கொள்ளவும் முடியாது.

நெறிமுறைக் கோட்பாடு என்பது அறிவுறுத்தலுக்கான உபகரணம் என்று அழைக்கப்படுகிறது. இந்த அறிவுறுத்தலானது சட்டமன்றம் மற்றும் நிர்வாகத்துறைக்கு உரியது. எவரெல்லாம் சட்டமன்றத்தில் அவர்கள் விரும்பிய வண்ணம் செயலாற்ற முடியாமல் போகிறதோ அவர்கள் இந்த உபகரணத்தின் அறிவுறுத்தல்களை மதித்து அதன்படி செயலாற்ற வேண்டும். இதுவே நெறிமுறைக் கோட்பாடு ஆகும். — பி.ஆர். அம்பேத்கார் — அரசியலமைப்பு மன்றம்.

**இந்தியா - ஒரு நல அரசு:**

அரசாங்கத்தின் கருதுகோள் என்னவெனில், தனது குடிமக்களை பாதுகாப்பது மற்றும் முன்னெடுத்துச் செல்வதில் அரசு ஒரு மிக முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதாகும்.

ஒரு மக்கள் நல அரசு, வாய்ப்புகளில் சமத்துவம் மற்றும் செல்வத்தைச் சமச்சீரான முறையில் விநியோகிப்பது ஆகிய கொள்கைகளின் அடித்தளத்தில் அமைந்ததே.

ஒரு நல்ல வாழ்க்கையின் குறைந்த பட்ச வசதிகளைக் கூட தாங்களாகப் பெற்று அனுபவிக்க முடியத மக்களுக்காகவும் பொறுப்பு வகிக்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு உண்டு என்ற கருதுகோளின் மீதும் அரசு கவனம் கொள்கிறது.

இந்த அமைப்பின் கீழ், தனது குடிமக்களின் நலவாழ்வு என்பது அரசினுடைய பொறுப்பாக ஆகிறது. சுதந்திரத்திற்கு முன்பு இந்தியா ஒரு மக்கள் நல அரசல்ல.

மக்களின் நலவாழ்வைப் பாதுகாப்பதிலோ அதை மேலும் முன்னெடுத்துச் செல்வதிலோ பிரிட்டிஷ் அரசாட்சி அப்படி ஒன்றும் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை.

அந்த அரசு என்ன செய்ததோ அதையெல்லாம் பிரிட்டிஷ் காலனிய அரசாங்கத்தின் நலன்களுக்குத் தேவைப்பட்ட அளவிற்கு மட்டுமே செய்ததேயன்றி, இந்தியாவின் மக்களுடைய நலன்களை முன்னிறுத்திச் செய்யவில்லை.

இந்தியா சுதந்திரத்தை அடைந்தபோது, அது எண்ணற்ற பிரச்சனைகளையும், சவால்களையும் தன்னிடத்தே கொண்டிருந்தது. சமூக மற்றும் பொருளாதார அசமத்துவம் எங்கு நோக்கினும் பரந்து விரிந்து நிலவி வந்தது.

அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள், பிரச்சனைகள் அனைத்தையும் மிக நன்றாக உணர்ந்திருந்தார்கள். அதன் காரணமாகத்தான், இந்தியா ஒரு மக்கள் நல அரசாக விளங்க வேண்டுமென்று, அவர்கள் தீர்மானித்தார்கள்.

இந்திய அரசியல் சட்டத்தில், அதன் முன்னுரையிலேயே இந்தியா ஒரு "இறையாண்மையுள்ள, சமதர்ம மதச் சார்பற்ற ஜனநாயக் குடியரசு" என்பதாக விவரிக்கப்பட்டுள்ளது.

அதன்படியே, இந்தியாவின் மக்களுடைய சமூக மற்றும் பொருளாதார நலவாழ்வை உறுதிப்படுத்துவற்கு அரசியல் சட்டம் மிக விரிவடைந்த விதிகளைக் கொண்டுள்ளது.

இது தொடர்பாக, இரண்டு குறிப்பான விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒன்று அடிப்படை உரிமைகள் வடிவத்தில், மற்றொன்று அரசுக் கொள்கையின் வழிகாட்டி நெறியின் வடிவத்தில் அமைந்துள்ளன.

**அடிப்படை உரிமைகளின் விதி:**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பகுதி மூன்றில் இடம் பெற்றுள்ள அடிப்படை உரிமைகள் பிரிவு, அனைத்து இந்திய குடிமக்களும் குடிமைச் சுதந்திரங்களையும், அடிப்படை உரிமைகளையும் பெற்றிருக்கலாம், கட்டாயம் அனுபவிக்க முடியும் என்பதற்கு உத்தரவாதமளிப்பதாகச் செயல்படுகிறது.

இந்த, மக்கள் சுதந்திரங்களும், உரிமைகளும் நாட்டின் வேறெந்த ஒரு சட்டத்திற்கும் மேலாக முன்னிலையிடம் பெற்றிருப்பவையாகும். இவை தனிமனித உரிமைகள், தாராளவாத ஜனநாயகங்களின் அரசியலமைப்புச் சட்டங்களில் பொதுவாக இடம் பெற்றிருப்பவையாகும்.

ஆனால், இது போதுமானதல்ல. இந்தியக் குடிமக்கள், பொருளாதார மற்றும் சமூக மேம்பாடு அடைவதற்கான வாய்ப்புகளையும் பெற்றாக வேண்டிய தேவையுள்ளவர்கள்.

அதன் காரணமாகவே, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில், அரசுக் கொள்கையின் வழிகாட்டி நெறிகள் அடங்கிய நான்காவது பகுதி உள்ளிணைக்கப்பட்டுள்ளது.

**நெறிமுறைக் கோட்பாடுகளின் முக்கியத்துவம்:**

அடிப்படை உரிமைகளுக்கு முரணான சட்டங்களை நீதிமன்றங்கள் செல்லுபடியாகாதென்று தள்ளிவிடும். ஆனால் வழிகாட்டி நெறிகளுக்கு அவ்வித முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. ஆட்சி செலுத்துவதற்கு அடிப்படை உரிமைகள் எவ்வளவு முக்கியமோ அதே போன்று வழிகாட்டி நெறிகளும் அடிப்படையானதாகும். 42வது திருத்தத்தின் படி வழிகாட்டி நெறிகள் முன்வரிசையில் வைக்கப்பட்டு, அடிப்படை உரிமைகள் அதன் பின் வைக்கப்பட்டுள்ளன.

25வது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி, வழிகாட்டி நெறிகளை செயல்படுத்தவற்காக மத்திய பாராளுமன்றம் சட்டங்கள் நிறைவேற்றலாம். அவ்வித சட்டங்கள் நீதித்துறையின் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டவைகளாக வைக்கப்பட்டுள்ளன.

மத்திய மாநில அரசுகளும், அதாவது பாராளுமன்றம் மற்றும் மாநிலச் சட்டசபைகள் தங்கள் கொள்கைகளை உருவாக்கும்பொழுது வழிகாட்டி நெறிகளைக் குறிக்கோள்களாகக் கருத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். வழிகாட்டி நெறிகளை அரசியல் அமைப்பில் பரிந்துரைகள் எனலாம். இவைகளை ஆட்சியாளர்களுக்கென வழங்கப்பட்ட நீதிநெறிகள் என்றும் கூறலாம்.

அரசியல் துறையில் எப்படி வயது வந்த மக்களுக்கு ஆட்சியில் பங்பெடுத்துக்கொள்ள சம வாய்ப்புக்கள் உண்டோ அதே போன்று பொருளாதாரத் துறையிலும் சமத்துவம் நிலவ வேண்டும். இதற்கு வழிகாட்டி நெறிகள் அடிகோலுகின்றன. மக்களுக்கு அரசாங்கத்தின் கடமைகள் என்னவென்பதை எடுத்துக் காட்டுகின்றன.

நெறிமுறைக் கோட்பாடு மற்றும் அடிப்படை உரிமைகள் அரசியலமைப்பின் மனசாட்சி என கிரான் வில்லி அஸ்டின் (Granville Austin) குறிப்பிடுகிறார்.

அரசாங்கமானது மக்கள் நலனிற்காக கொள்கைகளை வகுக்கும் போதும் சட்டங்களைச் செயல்படுத்தும்போதும் நெறிமுறைக் கோட்பாட்டின் லட்சியங்களை பூர்த்தி செய்யும் வண்ணம் செயல்பட வேண்டும். இது அரசியலமைப்பின் அறிவுறுத்தலாகும் அல்லது நாட்டின் சட்டமன்றம், நிர்வாகத்துறை மற்றும நீதித்துறை அங்கங்களுக்கு பரிந்துரைப்பதாகும்.

நவீன மக்கள் நல அரசின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் திட்டங்களை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். இவைகள் நாட்டில் பொருளாதார சமூக மக்களாட்சியை நிலை நிறுத்துவதாக அமைய வேண்டும்.

**அடிப்படை உரிமைகள் மற்றும் நெறிமுறைக் கோட்பாடுகளுக்கு இடையேயான வேறுபாடுகள்:**

| அடிப்படை உரிமைகள் | நெறிமுறைக் கோட்பாடுகள் |
|---|---|
| ✓ இவை எதிர்மறை தன்மை கொண்டவை, அரசுகள் சிலவற்றை செய்யக் கூடாது என்கிறது. | ✓ இவை நேர்மறை தன்மை கொண்டவை, அரசுகள் சிலவற்றைச் செய்ய வேண்டும் என்கிறது. |
| ✓ நீதிமன்றம் வாயிலாக தீர்வு காணக் கூடியது. | ✓ நீதிமன்றம் வாயிலாக தீர்வு காண இயலாது. |
| ✓ இதன் நோக்கம் நாட்டில் அரசியல் மக்களாட்சியை நிறுவுதல் | ✓ இதன் நோக்கம் நாட்டில் சமூக மற்றும் பொருளாதார மக்களாட்சியை நிறுவது. |
| ✓ சட்ட அங்கீகாரம் உடையது | ✓ நீதி மற்றும அரசியல் அங்கீகாரம் உடையது. |
| ✓ தனிநபர் நல மேம்பாட்டை போற்றுகிறது. மேலும் தனிநபரின் தனிப்பட்ட மற்றும் தனித்துவத்தை உயர்த்துகிறது. | ✓ சமுதாய நல மேம்பாட்டை போற்றுகிறது. மேலும் சமுதாய அமைப்புகள் மற்றும் சமூக சமத்துவத்தை உயர்த்துகிறது. |
| ✓ இவற்றைச் செயல்படுத்த எவ்வித சட்டங்களும் தேவையில்லை. இவை தன்னிச்சையாகவே செயல்படக் கூடியவை | ✓ இவற்றைச் செயல்படுத்த சட்டங்கள் இயற்ற வேண்டும். |

**நெறிமுறைக் கோட்பாட்டின் வகைப்பாடு:**

**சோசலிசக் கோட்பாடு:**

- உண்மையான நல அரசு ஒன்றை உருவாக்கும் நோக்கத்திலேயே நெறிமுறைக்கோட்பாடுகள் அமைந்துள்ளன. அத்துடன் பொருளாதாச் சுரண்டலுக்கும், ஏற்றத்தாழ்வுகளுக்கம், சமத்துவமின்மைக்கும் முடிவுகட்டி நியாயமான சமூக அமைப்பு சுமத்துகிறது. மக்கள் அனைவருக்கும் சமூக பொருளாதார அரசியல் நீதி கிடைக்கக் கூடியதன் சமுதாய அமைப்பினை உருவாக்கி நல அரசை உருவாக்க முயல வேண்டும். (ஷரத்து – 38)

- ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமவேலைக்கு சம ஊதியம் கிடைத்தல்

- ஏழைகளுக்கு இலவச சட்ட உதவி வழங்குவதன் மூலம் சமமான நீதி முறையை ஏற்படுத்துவது. (ஷரத்து – 39A)

- அரசின் பொருளாதார திறனுக்கும் வளர்ச்சிக்கும் உட்பட்டு வேலை செய்யும் உரிமையையும், கல்வி பெறும் உரிமையையும் வழங்கவும், வேலையில்லாத நிலையில் முதுமையில் நோயுற்றபோதும், இயலாத சூழ்நிலைகளில் அரசின் உதவியை வழங்கவும் முயல வேண்டும். (ஷரத்து – 41)

- மனிதாபிமான வேலைச் சூழல் அமைய, பேறுகாலச் சலுகை கிடைக்க. (ஷரத்து – 42)

- ஊட்டச்சத்து அளவை உயர்த்தி, வாழ்க்கைத் தரத்தையும் பொது ஆரோக்கியத்தையும் மேம்படுத்துவது அரசின் கடமை ஆகும். (ஷரத்து – 47)

காந்தீய கோட்பாடுகள்:

- காந்தீய சிந்தனைகளின் அடிப்படையில் இக்கோட்பாடு அமைந்துள்ளது.

- கிராமப் பஞ்சாயத்துக்களை அமைத்தல். (ஷரத்து – 40)

- கிராமப்புறங்களில் தனிநபர் அல்லது கூட்டுறவு முறையில் குடிசைத் தொழில்களை மேம்படுத்துதல். (ஷரத்து – 43)

- உடல் ஆரோக்கியத்திற்கு தீங்கு செய்யக் கூடிய மதுவகை மற்றும் போதைப் பொருள்களை பயன்படுத்தாமல் தடுத்தல். (ஷரத்து – 47)

- பசுவதையைத் தடுத்தல், கன்றுகள் மற்றும் பால் தரும் பசுக்கள், தீவனம் இன்றி வாடும் கால்நடைகளின் நலன்களை பேணுதல். (ஷரத்து – 48)

சுதந்திரமான அறிவு சார்ந்த கோட்பாடு:

- சுதந்திரப் போராட்ட கால சிந்தனைகளை உள்ளடக்கிய கோட்பாடாகும்.

- நாடு முழுமைக்கும் ஒரே மாதிரியான சிவில் சட்டத்தைக் கொண்டுவருதல்.

- ஆறு வயதிற்கு உட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் உடல் ஆரோக்கியம் மற்றும் கல்வி அளிப்பது. (ஷரத்து – 45)

- நிர்வாகத்திலிருந்து நீதித்துறையை பிரித்தல். (ஷரத்து – 50)

நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சில வழிகாட்டி நெறிமுறைகள்:

- அனேகமாக, வேலைவாய்ப்பு என்பதன் அனைத்துக் களங்களிலும் குறைந்த பட்ச ஊதியங்கள் நிர்ணயிக்கப்பட்டுவிட்டன.
- ஆண் - பெண் இருபாலருக்கும் சம வேலைக்கு சம ஊதியங்கள் நிர்ணயிக்கப்பட்டு சட்டமாக்கப்பட்டுள்ளன.
- கிராமப்புற வேலைவாய்ப்புகளை அதிகரிக்கச் செய்யும் வகையில் பல்வேறு திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டம் மற்றும் ஸ்வாண ஜயந்தி கிராம் ஸ்வரொஜ்கார யோஜனா – போன்றவை.
- பஞ்சாயத்து ராஜ் அமைப்புக்களுக்கு அரசியல் சட்டப்பூர்வமான அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. கிராம மட்டத்தில் கிராம ஊராட்சிகள் அமைக்கப்பட்டு செயல்பட்டும் வருகின்றன.
- குழந்தைகளுக்கு இலவச கட்டாயக் கல்வி அளிப்பதற்கான விதியை உறுதிப்படுத்துவதற்காக 2009ஆம் ஆண்டில் கல்விக்கான உரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- ஏழைகள், பின்தங்கிய வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் பட்டியலின மக்கள் ஆகியோருக்காக எண்ணற்ற நலத்திட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

வழிகாட்டி நெறிகளின் ஆன்மா என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே ஆகும். இது ஒரு தொடர்ச்சியான செயல்முறை, இன்னுமம பல சவால்கள் எதிர்கொண்டிருக்கின்றன.